1987 ஏப்ரல் 4]

திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தலைமைப் பணியிடம் மற்றும் அலுவலர் குடியிருப்பு கட்ட 2.95 ஏக்கர் நிலம் தேக்கம்பட்டி கிராமத்தில் கையகப்படுத்தும் கருத்துருவிற்கு எதிராக நிலச் சொந்தக்காரர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். எஞ்சியுள்ள களப்பணிகளை செயலாக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்கு மண்டல தலைமைப் பொறியாளர் நடவடிக்கை எடுத்து வருவதாக மேலாண்மை இயக்குநர், தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்துள்ளார். மேலும் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரிய குடிநீர்த் திட்டங்களுக்குள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை எனக் கருதப்படும் திருப்பூர், ஈரோடு, கோடைக்கானல், உதகமண்டலம் குடிநீர்த் திட்டங்களை விரைவு படுத்த வேண்டி, அரசு ஆணை (நிலை) எண் 1551, பொது துறை, நாள் 12—8—1986-ல் ஒரு உயர் அதிகாரியினால் கண்காணிக்கப் பட்டு வருவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. உயர் நீதி மன்றத்தில் வழக்கு முடிந்தவுடன் தலைமை நீர்ப்பிடிக்கும் இடம் கட்டப்பட்டு இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

(இ) விளாத்திகுளம் தொகுதியில் சில பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. குமரகுருபர ராம நாதன் மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். அவர் இருக்கையில் இல்லை. ஆகவே அறிக்கை அவையின் முன் வைக்கப்படுகிறது.

"விளாத்திகுளம் தொகுதியைச் சார்ந்த ஒட்டப்பிடாரம் ஒன்றியத்திலுள்ள தருவைக்குளம், பட்டினமருதூர், பனையூர், பலாப்பட்டி, மேல்மருதூர், குமாரபுரம், தலவாய்புரம், வடக்கு கல்மேடு, தெற்கு கல்மேடு, வேப்பலோடை, வல்லிநாயகிபுரம், சண்முகபுரம், வேடநத்தம், வெங்கடாசலபுரம், புளியமரத்து அரசடி, மேலஅரசடி ஆகிய கிராமங்களிலும் விளாத்திக்குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த குளத்தூர், பனையூர், கல்லூரணி, அகமதுபுரம், குண்டப்பெருமாள்புரம், கே. துரைசாமிபுரம், பட்ர்ந்தபளி, நெடுங்குளம், கன்னிமார்கூட்டம், பல்லாகுளம், பெரியசாமிபுரம் ஆகிய கிராமங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாமையும் நிலத்தடி நீர் உப்பு நீராக உள்ளதாகவும்,

TRUTH ALONE TRIUMPHS

மழையின்றி ஊரணிகள் வறண்டுவிட்டதாலும் கிராமமக்கள் வேறு இடங்களுக்கு குடியேறுவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பது குறித்து"

அறிக்கை.

பொதுவாக இங்கு சொல்லப்பட்டுள்ள கிராமங்களில் திறந்த கிணற்றிலிருந்து கிடைக்கும் நீர் சுமாராக குடிக்கும்படியாக உள்ளது. ஆனால் அந்தத் திறந்த கிணறுகள் கோடையில் வற்றி விடுகின்றன. வறட்சி நிலையைச் சமாளிப்பதற்கு ஆழ்குழாய்க் கிணறுகளை நிறுவினால் பெரும்பாலும் உப்புநீர்தான் கிடைக்கிறது. ஆகையால் தற்போதைய வறட்சி நிலையைச் சமாளிக்க வண்டியிலோ அல்லது லாரியிலோ மேற்படி கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க சிதம்பரனார் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். கிராமங்களில் நிரந்தர குடிநீர் பிரச்சினையை தாமிரபரணி ஆற்றிலிருந்து நீர் கொண்டு வருவதற்காக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்குவதன் மூலமே தீர்க்க முடியும். அதற்கான விரிவான ஆய்வுகள் செய்வதற்காக தற்பொழுது ஒரு தனி உபகோட்டம் 5—2—1987-லிருந்து செயல்பட்டு வருகிறது. ஆய்வு வேலைகளை முடிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்து முடிந்ததும் மேற்படி கிராமங்கள் அனைத்திற்கும் நிரந்தர குடிநீர் கிடைக்க வழியுள்ளது.

(ஈ) செங்கற்பட்டு மாவட்டம் கண்டிகை கிராமத்தில் சத்துணவு உண்ட குழந்தைகள் மயக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் வி.பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்கள் இருக்கையில் இல்லை. ஆகவே அறிக்கை அவையின் முன் வைக்கப்படுகிறது.

"4—3—1987 ஆம் தேதி பிற்பகலில் தாம்பரத்திற்கு அருகே உள்ள நல்லம்பாக்கம் கண்டிகை என்ற கிராமத்தில் உள்ள சத்துணவுக் கூடத்தில் சத்துணவு சாப்பிட்ட குழந்தைகள் 162 பேர் வாந்தி மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்